முருகப்பெருமான் துணை

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 662**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

22.07.2021, வியாழக்கிழமை

1. வரம்பெற்று வந்த வள்ளலே
வாழுகின்ற தவசியே அண்ணலே
சரவணச்சுடரேற்றி என் வழிபாட்டை
சகலருக்கும் ஞானமாக அருளும் ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
வரங்கள் பெற்று உன் சக்திமூலம்
வள்ளல் தன்மைகொண்ட மக்களாகி உலகோர்
3. உலகோர் உன் ஞானம் வழி இந்த கலியில்
உயிரை காக்கும் உலகை மாற்றும் சக்திகளாக மாறி
மாறியே கலியுகத்தார் உன்வழி மகத்துவமான ஞானிகளாகி சிறப்பர்
ஆறுதலாய் ஆறுமுகன் யான் உமக்குஆற்றலாக கலந்து அருளிவர
4. வருகின்ற உன் சக்தி
வையகத்தை பாதுகாப்புமிக்க பூமியாக்கும்
ஆகவே அரங்கன் முருகன் எனும்
அகிலத்தாரின் நாமஜெப பலம்
5. பலமதும் உலகப்பேரிடரை விரட்டும்
பழுதில்லாத ஞான ஆட்சியை உருவாக்கும்
சலனமற அரங்கனை தொடர்ந்து வரும் மக்கள் மூலமாகவும்
சரவணச்சுடரேற்றி வழிபடும் உலக அன்பர்கள் மூலமாகவும்
6. ஆகவே இந்த கலியுகம்
அதிசயமாக உலகமாற்றத்தை காணும்
வகையான தர்மத்தை ஏற்று வரும் மக்கள் மூலம்
வையகம் அமைதிமிக்க பூமியாக மாறும்
7. மாறுதலைச் செய்யும் மகா தவசி நீயப்பா
மக்களை காக்கும் ஒரே ஞானி கலியில் நீயப்பா
ஆறுமுகா எனும் ஜெபதபத்தை பெருக்கி
அகிலமே ஞானபலம் பெறவேண்டும் என
8. வேண்டிவேண்டி என்பால் பெற்றுவந்த
வரங்கள் அனைத்ததையும் மக்களுக்கே
தொண்டுவழி இறக்கி அருளுகின்ற
தூய ஞானியே அரங்கனே உன் சக்திக்குள்

9. சக்திக்குள் ஆறுமுகன் யான் சர்வபலமாய் இருக்க
சரணடைந்து உன்னை தொடரும் மக்கள் மூலம்
சக்திமிக்க ஞான யுகம் படைத்து
சகலருக்கும் ஞானியாகும் வாய்ப்பு தருவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–